இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 41 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 03 – வியாழக்கிழமை 19 செப்டம்பர் 2024 – திருச்சி ★ ★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 41: Thiruvalluvar Year - 2055 - Purataasi 03 - Thursday 19 September 2024 - Trichy ★★12 Pages ₹ 5.00






கழகத் தலைவரும். தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.9.2024) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், பெரியார் விருதினை திருமதி பாப்பம்மாள் அவர்களுக்கும், அண்ணா விருதினை மிசா இராமநாதன் அவர்களுக்கும். கலைஞர் விருதினை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும். பாவேந்தர் விருதினை கவிஞர் தமிழ்தாசன் அவர்களுக்கும், பேராசிரியர் விருதினை வி.பி. இராஜன் அவர்களுக்கும், மு.க. ஸ்டாலின் விருதினை ஒன்றிய முன்னாள் இணை அமைச்சர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம் அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு. கழக துணை பொதுச் செயலாளர்கள் – ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, ஆ. ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள். கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## மாநில சுயாட்சியை வென்றெடுக்க சட்ட முன்னெடுப்புகளை கழகம் மேற்கொள்ளும்!

# நமது இலக்கு 2026 தேர்தல் : வரலாற்று வெற்றியைப் பெறுவோம்!

## கழக முப்பெரும் விழா – பவள விழாவில் விருதுகளை வழங்கி

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் முழக்கம்!

**சென்னை, செப். 19 –**

**“எல்லா அதிகாரமும் கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் செய்யும்!” என்றும் – “நமது தொடர் வெற்றிகள் மூலமாக நூற்றாண்டு விழாவை நோக்கி முன்னேறுவோம்! அடுத்து நமது இலக்கு 2026 தேர்தல். இதுவரை இப்படியொரு வெற்றியை எந்தக் கட்சியும் பெற்றதில்லை என 2026-இல் வரலாறு சொல்ல வேண்டும்!” என்றும் – கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (17-09-2024) சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ திடலில் நடைபெற்ற கழக முப்பெரும் விழா – பவள விழா நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு : –

* கழகம் – நல்ல கழகம்!<br>
நம் திராவிட முன்னேற்றக் கழகம்!<br>
அதன் திருப்பணி என்றென்றும் தொடரும்!<br>
* கல்லக்குடி கொண்டு கன்னித் தமிழ் வென்று<br>
உள்ளம் குடிகொண்ட கழகம்!<br>
* வில்லும் வாளுமின்றி வெல்லும் திறம் கொண்டு<br>
வெற்றி பல கண்ட கழகம்!<br>
* அன்று அறிஞர் வழியில் வந்த கழகம்!<br>
பின்னர் கலைஞர் தலைமை தந்த கழகம்!<br>
* அன்று பிள்ளை நிலவான கழகம்!<br>
இன்று பவளவிழா காணும் கழகம்!<br>
* கழகம் – நல்ல கழகம்!<br>
நம் திராவிட முன்னேற்றக் கழகம்!



அதன் திருப்பணி என்றென்றும் தொடரும்!

தியாகத்தின் உருவமான தி.மு.க. தொண்டர்களின் உள்ளத்துக்கு எனது வணக்கம்!

என்னை இப்படி தலைநிமிர்ந்து முழங்க வைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள் அனைவரும் வாழும் திசையை நோக்கிப் பாசமிகு வணக்கம்! உங்களின் வியர்வையாலும் இரத்தத்தாலும் மூச்சுக்காற்றாலும் உழைப்பாலும் தான் இத்தனை ஆண்டுகாலம் கழகம் கம்பீரமாக நிற்கிறது. அப்படிப்பட்ட தியாகத்தின் உருவமான திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் உள்ளத்துக்கும் உங்களது இல்லத்துக்கும் எனது அன்பான வணக்கம்!

நீங்கள் இல்லாமல் கழகம் இல்லை! நீங்கள் இல்லாமல் நான் இல்லை! அந்த நன்றியுணர்ச்சியோடுதான் உங்கள் முன்பு நான் கம்பீரமாக நின்றுகொண்டு இருக்கிறேன்.

இந்த எழுச்சிமிகு முப்பெரும் விழா நிகழ்ச்சிக்கு, தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள ஆருயிர் அண்ணன் – கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களே! கழகப் பொருளாளர் என் சகோதரர் டி.ஆர்.பாலு அவர்களே! முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்களே! துணைப் பொதுச் செயலாளர்கள், ஐ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா, என் அருமைத் தங்கை அன்புக்குரிய கனிமொழி கருணாநிதி, அந்தியூர் செல்வராஜ் அவர்களே! இளைஞர் அணிச் செயலாளர் தம்பி உதயநிதி உள்ளிட்ட பல்வேறு அணிகளின் நிர்வாகிகளே! விருதுகளைப் பெற்றுள்ள விருதாளர்களே! அமைச்சர் பெருமக்களே! தலைமைக் கழக நிர்வாகிகளே! ஆற்றல்மிகு மாவட்டச் செயலாளர்களே! நாடாளுமன்ற – சட்டமன்ற – உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்!

தொடர்ச்சி 3– ஆம் பக்கம்

## இனமானம், மொழிமானம், சுயமரியாதையை கண்போல் காக்கும்

# மு.க.ஸ்டாலினின் கடமை உணர்வு கண்டு வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!

### ‘முப்பெரும் விழா’வில் முத்தமிழறிஞர் கலைஞர் உரையாற்றுவது போன்ற வீடியோ

### ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் ஒளிபரப்பு ! காண்போரை மெய்சிலிர்க்க வைத்த காட்சி !



**சென்னை,செப்.19–**

**சென்னை – நந்தனம் – ஒய்.எம்.சி.ஏ., திடலில் நேற்று முன்தினம் மாலை, சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியனின் பிரம்மாண்டமான நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற “கழகத்தின் மாபெரும் முப்பெரும் விழா” நிகழ்வின் தொடக்கத்தில் – ‘ஏ.ஐ.’ (AI) எனப்படும் ‘செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தில்’ தயாரிக்கப்பட்ட வீடியோ ஒன்று ஒளிபரப்பப் பட்டது.**

காண்போர் கண்களுக்கு விருந்தாக, மெய்சிலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருந்த அந்த வீடியோவில் – கழக முப்பெரும் விழாவின் வரலாறும் சிறப்பும் விவரிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து, தமிழினத் தலைவர் – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வாழ்த்தி உரையாற்றுவது போன்ற வீடியோ ஒளிபரப்பானது.

அதில் “இனமானம், மொழிமானம், சுயமரியாதையை கண்போல் காக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் கடமை உணர்வு கண்டு பாராட்டுகின்றேன்! வாழ்த்துகிறேன்!” – என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிடுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அவ்வுரை வருமாறு :

**“என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே!**

**தந்தை பெரியார் வடித்த கொள்கையை, பேரறிஞர் அண்ணா வகுத்த பாதையை, என்னால் கட்டிக் காக்கப் பட்ட இனமான முரசத்தை, ஓங்கி ஒலிக்கச் செய்து, கம்பீரமாகக் கழகத்தை ஆட்சிப் பொறுப்பில் அமரச் செய்திருக்கும் தம்பி மு.க.ஸ்டாலின் அவர்களை எண்ணி எண்ணி என் நெஞ்சம் பெருமிதம் கொள்கிறது.**

**ஸ்டாலின் என்றாலே உழைப்பு!**

**உழைப்பு! உழைப்பு! உழைப்புதான்!**

**கழகக் களப்பணியில் 55 ஆண்டுகளாய் அயராது உழைக்கும் அவர், “திராவிடச் செம்மலாய்”, இந்தியாவின் முன்மாதிரி முதல்வராய், “நல்லுலகம் போற்றும் நாயகராய்” விளங்குகிறார்.**

**சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி இவற்றின் பாதையில் கழக ஆட்சியை சிறப்பாக வழிநடத்துகிறார்.**

**இனமானம், மொழிமானம், சுயமரியாதையை கண்போல் காக்கும் அவரது கடமை உணர்வைக் கண்டு நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.**

**வாழ்க பெரியார், அண்ணாவின் புகழ்!**

**ஓங்குக திராவிட மாடல் அரசு!!”**

இவ்வாறு – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உரையாற்றுவது போல, ‘ஏ.ஐ.’ (AI) தொழில் நுட்பத்தில்’ காட்சி வடிவமைக்கப்பட்டிருந்தது.